# விலைப்பட்டியல்
# கொலைப்பட்டியல்
# மு.கா.தேசியப்பட்டியல்



ஏ.எல்.எம். றிபாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைப்பட்டியல்,
# கொலைப்பட்டியல்,
# மு.கா. தேசியப்பட்டியல்


## ஏ.எல்.எம். றிபாஸ் LL B

Attorney - at - Law

Dip.in. Public Health

Dip.in. Counselling

Dip.in. Human Rights



Pena
Publication

பேனா பப்ளிகேஷன்

கிண்ணியா

Mob: +94 779300397 | E-mail: firosmi.pena@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேனா பதிப்பக வெளியீடு

**விலைப்பட்டியல், கொலைப்பட்டியல், மு.கா. தேசியப்பட்டியல்**

❖ ஆசிரியர்: ஏ.எல்.எம். றிபாஸ், 339, மக்காமடி வீதி, மருதமுனை - 03, கல்முனை, 0779351334, மின்னஞ்சல்: alaririfaz@gmail.com ❖ © ஆசிரியர் ❖ முதற் பதிப்பு: 2017 ❖ வெளியீடு: பேனா பப்ளிகேஷன், கிண்ணியா, தொ.இல: 0779300397, மின்னஞ்சல்: firosmi.pena@gmail.com, ❖ அட்டை பக்க வடிவமைப்பு: எம்.ஏ.எம். அஸ்மி (075 7022680), ❖ அச்சுப் பதிப்பு: ஏ.ஜே. பிரின்ட், தெஹிவளை, ❖ பக்கங்கள்: 42. ❖ விலை: 200/= ❖ ச.த.நூல்.இல: 978-955 - 99400-3-6

**Vilaippattiyal, Kolaippattiyal, Mu.Ka. Thesiyappattiyal**

❖ Author: A.L.M. Rifas, 339, Makkamady Road, Maruthamunai - 03 , Kalmunai, 077 9351334 E - Mail: alaririfaz@gmail.com ❖ © Author ❖ First Edition: 2017 ❖ Publication: Pena Publication, Kinniya, Cell Phone: 077 9300397, E-Mail: firosmi.pena gmail.com, ❖ Layout & Cover Designed: M.A.M. Asmy (075 7022680) ❖ Printed By: AJ Print, Dehiwela ❖ Page: 42, Price: 200/=, ❖ ISBN: 978-955-99400-3-6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.கா.தேசியப் பட்டியல் நியமனம்
கிடைக்காமல் போன
**மசூர் மௌலானா**

மு.கா.தேசியப் பட்டியல் நியமனம் கிடைத்த
**மருதூர் கனி**

இருவருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்காடு போட்டுப்பேச வேண்டிய விடயமாகிவிட்டது
முஸ்லிம் அரசியலும்
முஸ்லிம் காங்கிரஸ் அரசியலும்
தேசியப் பிரச்சினை போல
தேசியப்பட்டியல் பிரச்சினையும்
விஸ்வரூபமெடுத்து
உத்தரவாதங்கள் உறுதிப்பாடுகள்
கழுத்தறுப்புக்கள்
காலை வாருதலென உட்கட்சிப்பூசல்
உச்சமாகி
கட்சித்தலைவரே
கஃபத்துல்லா போய்
தேசியப்பட்டியல் கட்சிக்கு
கிடைத்து விடக்கூடாதென
துஆ கேட்கவேண்டுமென
ஹாஸ்யமாக பேசுமளவு கச்சுப்போய் விட்டது
கட்சியின் தேசியப்பட்டியல் நியமனம்
இக்கருத்துக்களை கொஞ்சமேனும்
இக்கட்டுரை தொகுப்பு
மெய்ப்பிக்குமென கருதுகின்றேன்

தோழமையுடன்
ஏ.எல்.எம். நிபாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்

| | |
|---|---|
| தேசியப்பட்டியல் + NFGG + சுழற்சிமுறை | 07 |
| சட்ட ஒழுங்கும் சாதிக்கும் தலைமைகளும் | 10 |
| தேசியப்பட்டியல் - பேய்க்காட்டல் | 19 |
| தேசியப் பட்டியல் | 26 |
| விலைப்பட்டியல், கொலைப்பட்டியல், மு.கா.தேசியப்பட்டியல் | 31 |
| ஹஸனலியின் வெளியேற்றம் உணர்த்தும் உண்மைகள் | 38 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப்பட்டியல் + NFGG + சுழற்சிமுறை

ஏ.எல்.எம். றிபாஸ்

விடிவெள்ளி, 18.09.2015

கௌரவ ரவூப் ஹக்கீம்,
தலைவர்,
ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்.

2015.08.17ம் திகதி நடைபெற்று முடிந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலைத் தொடர்ந்து தினக்குரல் பத்திரிகைக்கு என்னால் எழுதப்பட்ட அறிக்கை தொடர்பிலும் தேசியப் பட்டியல் பகிர்ந்தளிப்பு பற்றி கல்முனையில் தாங்கள் தெரிவித்த கருத்துத் தொடர்பிலும், மேலும் சில விடயங்களில் தங்களின் கவனத்தை குவிக்க விரும்புகிறேன்.

1. தேசியப் பட்டியல் நியமனமானது பொதுவாக புத்தி ஜீவிகளுக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டு வந்திருப்பதை தாங்கள் அறிவீர்கள் 1994ம் ஆண்டு 'அரசியல் ஆலை' அஷ்ரப் அவர்கள் மு.கா.வுக்கு கிடைத்த 3 தேசியப்பட்டியல் நியமனங்களையும் முறையே லிபரல் கட்சியைச் சேர்ந்த அசித்த பெரேராவுக்கும், 'பாமிஸ்' இயக்கத்தைச் சேர்ந்த என்.எம்.சுஹைர் அவர்களுக்கும், புத்தி ஜீவியாகிய உங்களுக்கும் வழங்கியிருந்தார். மட்டுமல்லாது உங்களை பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவராகவும் நியமித்தார். உங்களின் தேசியப் பட்டியல் நியமனத்தினூடாகவும், அஷ்ரபின் அரசியல் வழிமுறையில் நின்றும் NFGG க்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்குவதற்கான நியாயத்தை நோக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கூட்டுக் கட்சிகளுக்கும், புத்தி ஜீவிகளுக்கும் தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்பட்டு வந்திருப்பதை விகிதாசார தேர்தல் முறை அறிமுகமான 1989ம் ஆண்டு தொடக்கம் UNP, SLFP போன்ற பிரதான அரசியல் கட்சிகளின் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களை அவதானிப்பதன் மூலம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இதனை தாங்களுக்கு ஞாபகமூட்டவோ, தெளிவூட்டவோ வேண்டிய அவசியமில்லை.

3. பெரும்பான்மை சிங்களக் கட்சிகளை விடுத்து சகோதர இனமாகிய தமிழ் மக்களின் பேராதரவினைப் பெற்ற கட்சியாகிய தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ITAK + EPRLF + PLOT + TELO போன்ற கட்சிகளும், இயக்கங்களும் அங்கம் வகிப்பதோடு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமையினையும் பங்கிட்டு வந்திருப்பதும் தாங்கள் அறிந்ததே. கொள்கைகளும் அரசியல் பாதையும் வேறானாலும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு கட்சிகளுக்கிடையிலான கூட்டுணைவும், ஒற்றுமையும் அவசியம் அந்த அடிப்படையில் SLMC + NFGG கூட்டிணைவு தொடர்ந்தும் பேணப்படுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி பங்களிப்புச் செய்தமைக்கான பகிர்தளிப்பாக அமைய வேண்டும்.

4. 2012ம் ஆண்டு கிழக்கு மாகாண தேர்தலுக்கு முன்னர் தனியாகச் செயற்பட்டு வந்த DUA (ஜனநாயக ஐக்கிய முன்னணி) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து கொண்டதும் பின்னர் அதன் தலைமை கிழக்கு மாகாண சபை முதலமைச்சராக செயற்பட்டு வருவதும் சகோதர கட்சிகளின் கூட்டிணைவு மூலமே சாத்தியமானது என்பதையும் இத்தகைய இணைவும் அதிகார பங்கீடும் கட்சியின் வளர்சிக்கும் மக்கள் மத்தியில் நம்பிக்கை கட்டியெழுப்பப்படுவதற்கும் பிரதானமானது.

5. 2004ம் ஆண்டு UNP க்கும் SLMC க்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐ.தே.கட்சி 4 தேசியப் பட்டியல் நியமனங்களை வழங்கியது. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் அதிருப்தி அடைந்த போதிலும் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக் கையின் நம்பிக்கையினை காப்பாற்றும் விதமாக UNP செயற்பட் டமையினையும் அதே போல் SLMC + NFGG புரிந்துணர்வு உடன்படிக்கையின் சாரம்சங்களை தாங்கள் கவனத்தில் கொள்வது அவசியம்.

6. 1989ம் ஆண்டு அல்லது 1994ம் ஆண்டு தலைவர் அஷ்ரப் அவர்கள் காத்தான்குடி மண்ணிலிருந்து சுழற்சி முறையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென கண்ட கனவு அவரின் 15 ஆண்டு பிரிவின் பின்னராவது 'கபூலா' க்கப்பட வேண்டுமாயின் காத்தான்குடி மண்ணில் கருக்கொண்ட NFGG க்கு தேசியப் பட்டியல் நியமனத்தை வழங்க தாங்கள் தயக்கமின்றி முன்வர வேண்டும்.

7. வன்னி, திருமலையில் மு.கா. பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டும் மட்டக்களப்பில் மு.கா. பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட தங்களை ஏணியாகவும், மெழுகாகவும் இணைத்துக் கொண்ட NFGG காத்தான்குடி நகரசபையில் கடைப்பிடித்துக் காட்டிய மீளழைத்தல் (Recall System) நல்லாட்சித் தத்துவத்தினை முஸ்லிம் அரசியலில் அமுல்படுத்துவதற்கு தேசியப் பட்டியலின் முதல் பதவிக் காலத்தினை வழங்கி உரிய கால நிறைவில் இராஜினாமா செய்து காட்டுவதற்கு தாங்கள் களமமைத்துக் கொடுக்க வேண்டும்.

நன்றி.

வஸ்ஸலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப்பட்டியல் : சட்ட ஒழுங்கும் சாதிக்கும் தலைமைகளும்

எம்.எம்.எம். நூறுல்ஹக்

விடிவெள்ளி, 01.01.2016

நமது நாட்டின் நடைமுறை அரசியல் அமைப்பு 1978 இல் கொண்டுவரப்பட்டதாகும். இவ்வரசியலமைப்பின் ஊடாகவே விகிதாசாரத் தேர்தல் முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் நூற்று தொன்னூற்றாறு எனவும் வரையறை செய்யப்பட்டிருந்தது. இவர்களுள் 160 பேர் தேர்தல் தொகுதி ரீதியாகவும் மற்றும் 36 பேர் ஒன்பது மாகாணங்களுக்கும் நான்கு பேர் என்ற ரீதியிலும் பகிர்ந்தளிக்கும் அடிப்படையிலும் இருபத்தி இரண்டு தேர்தல் மாவட்டங்களிலிருந்து தேர்தல் மூலம் தெரிவாகும் வகையில் வகுக்கப்பட்டிருந்தது.

இருந்தாலும் இவ்வரசியலமைப்புக்கு 1988ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட பதினான்காவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதில் ஆரம்பத்தில் காணப்பட்ட 62ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் திருத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62:(1) "அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க தேர்ந்தெடுக்கப் பட்ட இருநூற்று இருபத்து ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் ஒன்று இருத்தல் வேண்டும்" என்ற வாசகத்தினூடாக மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முன்னர் அனுமதிக்கப்பட்டிருந்த நூற்று தொன்னூற்றாறு என்பதுடன் மேலும் இருபத்தொன்பது உறுப்பினர்களால் அதிகரிக்கப்பட்டதை இது காட்டுகின்றது.

இந்த இருபத்தொன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னர் குறிக்கப்பட்டது போன்று மாவட்டத்தினூடாக மக்களின் வாக்கினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் வகையில் அமையாது, கட்சிகளுக்கும் சுயேட்சைக்குழுக்களுக்கும் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும். இவர்கள் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் என அழைக்கப்படு கின்றனர். இது பற்றி நமது அரசியலமைப்பு பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றது.

"99அ உறுப்புரை 98 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நூற்றித் தொன்னூற்றியாறு உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கான பொதுத் தேர்தல் ஒன்றில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்பட்ட பின்னர் தேர்தல்கள் ஆணையாளர், அத்தகைய பொதுத் தேர்தல்களில் அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அத்தகைய பொதுத்தேர்தலில் பெறப்பட்ட மொத்த எண்ணிக்கையிலான வாக்குகளுக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதா சாரத்தில், அத்தகைய பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் சுயேட்சைக் குழுக்களுக்குமிடையே எஞ்சியுள்ள இருபத்தொன்பது ஆசனங்களை உடனடியாக பங்கு போடுதல் வேண்டும் என்பதுடன்,

ஒரு பொதுத் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வோர் அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சியும் அல்லது சுயேட்சைக் குழுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய தேர்தலுக்கென குறித்துரைக் கப்பட்ட நியமன காலப் பகுதியினுள், பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுள்ள ஆட்களின் நிரல் ஒன்றை ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் அத்தகைய பங்குபோடுதலின் மேல் அத்தகைய கட்சி அல்லது குழு எந்த ஆசனங்களுக்கு உரித்துடையதாக வருமோ அந்த ஆசனங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை நிரப்புவதற்கு அந்நிரலில் இருந்து அது ஆட்களைப் பெயர் குறித்து நியமிக்கலாம்.தேர்தல்கள் ஆணையாளர் இவ்வுறுப்புரையின் கீழ் தமக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிரலையும் பெயர் நியமன காலப்பகுதி முடிவுறுவதன் மேல் உடனடியாக கெசட்டில், சிங்கள, தமிழ் அத்துடன் ஆங்கிலப் புதினத்தாள் ஒன்றிலும் வெளியிடுவித்தல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பங்குபோடுதலின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக்குழு வொன்று ஆசனம் ஒன்றுக்கு உரித்துடையதாக உள்ளவிடத்து, தேர்தல்கள் ஆணையாளர் ஓர் அறிவித்தல் மூலம், அத்தகைய ஆசனங்களை நிரப்புவதற்கென இவ்வுறுப்புரையின் கீழ் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிரலில் அல்லது அத்தேர் தலில் அத்தகைய கட்சியினால் அல்லது குழுவி ால் ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் நியமனப்பத்திரத்தில், அவர்களின் பெயர் உள்ளடக்கப்பட்ட ஆட்களாக உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந் தெடுக்கப்படுவதற்குத் தகைமையுள்ள ஆட்களை, அத்தகைய அறிவித்ததிலிருந்து ஒரு கிழமையினுள் பெயர் குறித்து நியமிக்கும் படி அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரை அல்லது அத்தகைய சுயேட்சைக் குழுவின் குழுத்தலைவரை தேவைப் படுத்துதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களை பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் என வெளிப்படுத்துதலும் வேண்டும்..."

இது தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களை எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கீடு செய்வது என்பதையும்அதற்கு யாரை நியமிக்கலாம் என்பதையும் மிகவும் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. இம்முறை மையைக் கூட நமது அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட பதினான்காவது திருத்தத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட் டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரம் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமை ஏற்படுத்தப்பட்ட நோக்கத்தை பின்வருமாறு நமது அரசியலமைப்பு சுட்டிக்காட்டுகின்றது.

நமது நடைமுறை அரசியலமைப்புக்கு 1988ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட பதினைந்தாவது திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் 99அ எனும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் மூன்றாம் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"தேர்தல்கள் ஆணையாளர் மேற்கூறப்பட்ட அறிவித்தலை வழங்கும் முன்னர் 98ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், இன ரீதியான அல்லது வேறு வகையான ஏதேனும் சமூகத்தைச் சேர்ந்தவர்களுமான உறுப்பினர் களின் எண்ணிக்கை தேசிய சனத்தொகை விகிதா சாரத்துக்கு இயைபவுள்ளதாவெனத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆட்களைப் பெயர் குறித்து நியமிப்பதில்,செயல்முறைக்குகந்தவரை எல்லாச் சமூகத் தினரையும் பிரதிநிதித்துவப்படுத்தலானது, அதன் தேசிய சனத்தொகை விகிதாசாரத்துக்கு இயைபவுள்ளதென்பதனை உறுதிப்படுத்துமாறு அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளருக்கு அல்லது அத்தகைய சுயேட்சைக்குழுவின் குழுத்தலைவருக்கு வேண்டுகோள் விடுத்தலும் வேண்டும்."

ஆகவே தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் முறைமை என்பது நமது நாட்டில் வாழும் அனைத்துச் சமூகங்களினதும் அவரவர்களின் மொத்த சனத்தொகைக்கேற்ப நாடாளுமன்றத்தின் உறுப்புரிமை இருப்பதை உறுதி செய்யும் வகையில் நமது அரசியல் கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் நடந்து கொள்ள வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்ற எதிர்பார்ப்பு இருப்பதை இது நமக்கு தெளிவாக்கி வைக்கின்றது.

இதற்கப்பால் நிபுனத்துவ ஆளுமை நிறைந்தவர்களின் அனுகூலங்களை நமது நாடு பெற்றுக்கொள்ளும் நோக்கில், தேர்தல் போட்டிகளுக்குப் புறம்பாக அல்லது வெளியிலிருந்து புத்திஜீவிகளை ஒவ்வொரு கட்சிகளும் அல்லது சுயேட்சைக்குழுக்களும் அவர்களை நாடாளுமன்றினுள் கொண்டு வருவதும் அரசாங்கத்தின் செல்நெறியில் தாக்கத்தைச் செலுத்துவதற்கும் இம்முறைமை உதவக்கூடியது என்றும் இம்முறைமை கொண்டுவரப்பட்ட காலத்தில் அரசியல் விமர்சகர்களினால் எடுத்துக்காட்டப் பட்டிருந்தன.

அதேநேரம் நமது நாட்டில் வாழும் அனைத்துச் சமூகங்களினதும் அவரவர்களின் தேசிய சனத்தொகைக்கு ஏற்ப நாடாளுமன்ற உறுப்புரிமை போதியளவு இல்லாதவிடத்து, இம்முறைமையினூடாக அதனை சரிசெய்துகொள்ளும்படி தேர்தல்கள் ஆணையாளர் தேசியப்பட்டியல் உறுப்புரிமைக்கு உரித்தான கட்சிகளிடம் மற்றும் சுயேட்சைக்குழுக்களிடம் வேண்டுகோள் விடுக்க முடியும் என்பதையும் இச்சட்டம் எடுத்துக்காட்டினாலும் அதன் முழுமைத் தன்மை நிறைவேற்றப்படுவதை தேர்தல்கள் ஆணையாளரால் உறுதிப்படுத்தும் திடமான சட்ட ஏற்பாட்டினை அவர் கொண்டில்லை என்பதையும் இது எடுத்துக்காட்டத் தவறவில்லை.

ஏனெனில் தேர்தல்கள் ஆணையாளர் கட்சிகளிடமும் சுயேட்சைக் குழுக்களிடமும் கோரிக்கை விடுக்கும் அதேநேரம் அதனை நடைமுறைப்படுத்துவது கட்சியிடமும் குழுக்களிடமுமே தங்கியிருக்கின்றது. ஆதலால் அவை விரும்பினால் மட்டுமே இதனை அனுபவிக்கக் கூடியதாக அமைகின்றது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் சமூகங்களுக்கான நாடாளுமன்ற உறுப்புரிமை குறைவாகக் காணப்படுகின்ற போது நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை நம்மிடமிருந்து இழக்கச் செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியப்பட்டியலில் உறுப்பினர்களாக யாரை நியமிக்க முடியும் என்பதை நாம் மேலே பார்த்த 99அ உறுப்புரிமையில் தேசியப் பட்டியல் உறுப்புரிமைக்கு உரித்துடையதாக உள்ளவிடத்து தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட தேசியப்பட்டியல் நிரலில் அல்லது அத்தேர்தலின் ஏதேனும் ஒரு தேர்தல் மாவட்டம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட நியமணப்பத்திரத்தில் பெயர் உள்ள வராகவும் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

இது பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற்று முடிந்ததும் முதல் கட்டமாக வழங்கப்படும் தேசியப்பட்டியலுக்குரிய நாடாளுமன்ற உறுப்பினரைதேர்ந்தெடுக்கும்நிலையினைச்சுட்டிக்காட்டுகின்றது. இதன் பின்னர் ஏற்படும் வெற்றிடத்தை எவ்வாறு நிரப்புவது என்பது தொடர்பில் நமது அரசியல் அமைப்பு தெளிவாக சுட்டிக்காட்டவில்லை. அதேநேரம் இச்சட்டம் அமுலானதிலிருந்து இக்கட்டுரை எழுதும் நாள் வரை தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரி மையின் வெற்றிடம் தொடர்பிலான எந்தத் தீர்க்கப்பட்ட வழக்குகளோ மற்றும் பொருள்கோடல்களோ உயர்நீதிமன்றத் தினூடாக வெளிவந்திருக்கவுமில்லை.

மாறாக தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வெற்றிடம் ஏற்பட்ட போது மேற்சுட்டிக்காட்டிய இரண்டு வகையான வேட்புமனுக்களுக்குள் அடங்காதவர்கள் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டிருக் கின்றனர். இதற்கு நல்லதொரு உதாரணம் மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் மரணித்த போது அவரது இடத்திற்கு முன்னால் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை நியமித்ததைக் கொள்ளலாம்.

மாவட்ட தேர்தல்மனுப்பட்டியல் என்பது அந்த பாராளுமன்ற காலம்வரை செல்லுபடியானதாகும். அதனால் அதில் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு அப்பட்டியலே பயன்படுத்தப்படு கின்றது. இதற்கு முக்கிய காரணம் விகிதாசார தேர்தல் முறைமையில் இடைத்தேர்தல் என்பது இல்லாமையாகும். மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வெற்றிடம் வந்தால் அந்த பட்டியலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாகவே நிரப்பப்படல் வேண்டும் என்பதை அரசியலமைப்புச் சட்டம்,தேர்தல்

சட்டம் என்பன துல்லியமாக எடுத்து முன்வைக்கின்றன. ஆனால் தேசியப்பட்டியல் நிரல் இவ்வாறு விண்ணப்பிக்கப்பட்ட நாடாளுமன்றம் கலையும் வரை செல்லுபடியாகும் என்று திட்ட வட்டமாகச் சொல்லுமளவில் அரசியலமைப்பிலோ பாராளு மன்ற தேர்தல்கள் சட்டத்திலோவெளிப்படையாக வாசகம் காணப்பட வில்லை.

இந்நிலையில் தற்போதைய தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அவர்கள் தேசியப்பட்டியல் நிரலில் காணப்படுபவர் அல்லது மாவட்ட தேர்தல் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படாதவர்களில் இருந்து தான் எதிர்காலத்தில் தேசியப்பட்டியல் வெற்றிடம் ஏற்பட்டால் நிரப்பப்படும் என்ற கருத்தை பகிரங்கமாக உத்தியோக பூர்வமாக தெரிவிக்காத நிலையில் சிலரிடம் இவ்வாறு தெரிவித்ததாக பேசப்படுகின்றது. இது உண்மையாயின் இதன் எதிரொலியை நாம் இன்றைய தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பு ரிமையில் வெற்றிடமொன்று ஏற்படும்போதுதான் சந்திக்க முடியும். அக்கூற்று பற்றி தீர்க்கமான முடிவும் கிட்டும்.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமை வெற்றிடத்தில் இதுகாலவரை பின்பற்றப்பட்டுவரும் பட்டியல்களுக்கு வெளியி லிருந்து நியமிக்கப்படும் நடைமுறை இருந்துவருகின்றது. இதற்கு என்ன நேரும் என்பதைப் பார்க்கலாம் மாறாக இன்று நடைமுறையிலுள்ள அரசியலமைப்பின் மேற்படிய கூற்றுக்களின் பிரகாரமும் இதுகாலவரையான நடைமுறைகளும் பட்டியலுக்கு வெளியிலிருந்து தேசியப்பட்டியல் வெற்றிடம் நிரப்பப்படுவதில் எந்த தடையையும் கொண்டில்லை என்ற கருத்துத்தான் வலிமை பெற்றுள்ளது.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையை தேர்தலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியிட்டு மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்களுக்கு வழங்கக் கூடாது, அப்படி வழங்குவது அவர்களை மக்கள் நிராகரித்தமை அர்த்தமற்றுப்போய்விடுகின்றது என்று எம்மில் சிலர் கருத்துரைத்து வருகின்றமையை அண்மைக்காலங்களில் காணமுடிகின்றது. இது புத்திஜீவிகளின் உன்னதமான கூற்று என்று பலர் நம்பும் நிலையும் இன்று ஏற்பட்டிருக்கின்றது.

உண்மையில் அவ்வாறு தேர்தலில் போட்டியிட்டு தோற்றவர்கள் தேசியப்பட்டியலில் நியமிக்கக்கூடாதென்று கூறுவது நமது அரசியலமைப்பு எடுத்துக்காட்டும் 99அ வில் மூன்றாம் பந்தியில் காணப்படும் வாசகத்துக்கு முரணானதாகும். எனில் இவ்வாறான தேசியப்பட்டியல் நியமனங்கள் சட்டத்தின் பிரிவினால் அங்கீகரிக்கப் பட்டவொரு செயற்பாடாகவே கொள்ளப்படல் வேண்டும்.

அதுமட்டுமன்றி இந்நடவடிக்கை என்பது இந்த நடைமுறை பாராளுமன்ற காலத்தில் மட்டுமன்றி இதற்கு முன்னரும் தேர்தல் களில் தோற்றவர்கள் நியமிக்கப்படும் பண்பு பின்பற்றப்பட்டே வந்திருக்கின்றது. இது நமது கூர்ந்த கவனிப்புக்குரிய பக்கமாகும்.

தேசியப்பட்டியல் சமாச்சாரம் நமது முஸ்லிம் கட்சிகளின் வரலாற்றில் இடம்பிடித்துள்ளன. இருந்தாலும் சில நேரங்களில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப் படுபவர்களைப் பொறுத்து மற்றவர்கள் இது பிழை என்ற சர்ச்சையில் இறங்கிவிடுகின்றனர். முஸ்லிம்களின் அதிகரித்த ஆதரவினைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பலத்த பிணக்குகளை இது தொடர்பில் எதிர்கொண்டதொரு கட்சியாகவும் காணப்படுகின்றது.

அந்தவகையில் கடந்த பொதுத்தேர்தலையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு ஐக்கிய தேசியக்கட்சியுனூடாக கிடைத்த இரண்டு தேசியப்பட்டியலுக்கு சட்டத்தரணி எம்.எச்.எம் சல்மான், டாக்டர் ஹாபிஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இந்த நியமனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியானதா என்கின்ற கேள்வி முஸ்லிம் சமூகத்திடமும் குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆதரித்த வாக்காளர்களிடமும் பரவலாக இருந்துவருகின்றது.

பதினைந்தாவது நாடாளுமன்ற தேர்தலினை அடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு மிகுந்த நம்பிக்கைக்குரியவர் என நம்பப்பட்டு முதலில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள் தமது விசுவாசத்தை நிரூபிப்பார்களா இல்லையா என்பதை எதிர்காலம்தான் நிர்ணயிக்கும் எனலாம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைக்கும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி என்பது கட்சிக்காக வாக்களித்த மக்களின் வாக்குப்பலத்தினால் பெறக்கூடிய ஒன்றாகும். அதனை தலைவர் தன்னிஷ்டத்துக்கு வழங்குவதென்பது ஒரு ஜனநாயகக் கூறல்ல.

மாறாக தமது கட்சியின் உயர்பீட கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு அது தீர்மானிக் கப்படல் வேண்டும். அதற்காக போலித்தனமான முறையில் இது மஸூறா முடிவு என காண்பித்து தலைமைத்துவ அதிகாரத்துவ தீர்வாக தேசியப்பட்டியல் விவகாரம் முடிவு பெறுவது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆதரித்த மக்களுக்கு ஆரோக்கியமான பயனை அளிக்காதென்பதே திட்டவட்டமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப்பட்டியல் - பேய்க்காட்டல்

ஏ.எல். நிப்றாஸ்

வீரகேசரி, 18.10.2015

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் தனக்குக் கிடைக்கும் என்று அநேகமான ஊர்களும் தனிநபர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்று இன்றுடன் இரண்டு மாதங்கள் முடிவடைகின்ற போதிலும் தற்காலிகமாக நிரப்பப்பட்ட தேசியப் பட்டியலுக்கு இதுவரைக்கும் யாரொருவரும் நிரந்தரமாக அல்லது சுழற்சி முறையில் நியமிக்கப்படவில்லை. போகின்ற போக்கைப் பார்த்தால் பொறுமை காத்தல் என்பது இலவு காத்தலாகவே முடியும் போலிருக்கின்றது.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் தேசியப் பட்டியலை முஸ்லிம் காங்கிரஸ் ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்தியது. இந்த நாட்டு முஸ்லிம் மக்களுக்கு அக்கட்சி செய்த சேவைகளையும் கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் சாதனைகளையும் சொல்லி வாக்குக் கேட்க முடியாத ஒரு சூழல் இருந்தது. பிரதேச மத்திய குழுக்கள் சிதைவடைந்திருந்த நிலையில் கட்சியின் கட்டுக்கோப்பும் உடைவெடுத்திருந்தது. அதைவிட முக்கியமாக ஒவ்வொரு ஊருக்குள்ளும் முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த இரண்டு மூன்று முக்கியஸ்தர்கள் ஆளுக்காள் முரண்பட்டுக்கொண்டு அரசியல் செய்துகொண்டிருந்தார்கள். ஆதலால், தேசியப் பட்டியலை பராக்குக் காட்டியே மக்களிடம் வாக்குக் கேட்கவேண்டிய இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் தேர்தல் காலங்களில் பிரச்சாரத்திற்காகச் சென்ற கணிசமான பிரதேசங்களில் தேசியப் பட்டியல் தருவதாக வாக்குறுதி அளித்தார். அம்பாறையில், மட்டக்களப்பில், கம்பஹாவில், புத்தளத்தில் என பல இடங்களில் தேசியப் பட்டியல் தருவதாக பகிரங்க வாக்குறுதியை வழங்கினார். தேசியப் பட்டியல் கேட்கின்ற மக்களுக்கு இல்லை என்று சொல்ல முடியாதுதானே என்று அக்கட்சி சார்பில் ஒரு ரெடிமேட் விளக்கம் அளிக்கப்பட்டது உண்மைதான். ஆனால், 02 தேசியப் பட்டியல் உறுப்புரிமைகளே கிடைக்கும் என்பது நன்றாகத் தெரிந்திருக்க நான்கைந்து இடங்களில் சுமார் பத்துப் பதினைந்து பேருக்கு தேசியப் பட்டியல் ஆசையை ஊட்டுவதன் வினையைத்தான் கட்சி இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

உண்மையில் யாருக்கு அல்லது எந்த ஊருக்கு தேசியப் பட்டியல் வழங்க வேண்டிய கடப்பாடு அதிகமாக இருக்கின்றதோ அந்த ஊருக்கு, அந்த நபருக்கு மட்டும் இம்முறை எம்.பி. தருவதாக உறுதியளித்திருக்க வேண்டும். மற்றைய ஊர்களுக்கு இனிவரும் காலங்களில் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை தருவதாக வாக்குறுதி அளித்திருக்கலாம். ஆனால், கட்சித் தலைமை அவ்வாறு செய்யத் தவறிவிட்டது. இது பிற்காலத்தில் பாரிய சிக்கலைக் கொண்டு வரும் என்பது கட்சியின் முக்கியஸ்தர்களுக்குத் தெரியும் என்றாலும் தலைவருக்கு நல்ல பிள்ளையாக தம்மைக் காட்டிக் கொள்வதற்காக அவர்கள் இந்த நடவடிக்கையை தடுக்காமல் இருந்துவிட்டனர் என்றே கருத வேண்டியுள்ளது.

தேர்தல் முடிவு வெளியானதும் முஸ்லிம் காங்கிரஸ தலைவர் ஹக்கீமின் வீடு நிரம்பி வழிந்தது. தீராத நோய்களைக் குணப்படுத்துவதற்கு ஒரு பரியாரி இருக்கின்றாராம் என்று கேள்விப்பட்டு பிராமப்புற மக்கள் வேன் பிடித்துக்கொண்டு பரியாரி வீட்டுக்குச் செல்வதுபோல், போராளிகள் தலைவரின் வீட்டு வாசலில் தவம் கிடந்தனர். தலைவரும் உயர் பீடமும் திணறிப்போனது. யாரையும் பகைத்துக்கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் நிச்சயமாக அவர்களை றிசாட் பதியுதீன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்கின்ற காந்தம் இழுத்துக்கொள்ளும். எனவே, ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி இழுத்தடித்து அவர்களே சீச்சி இந்தப் பழம் புளிக்கும் என்ற நிலைமையை ஏற்படுத்துவதைத் தவிர ஹக்கீமுக்கு வேறு வழி இருக்கவும் இல்லை.

இப்படியே இழுத்துக்கொண்டு போவோம் என்று தலைவர் சிலவேளை எண்ணியிருக்கக் கூடும். ஆனால், இது முஸ்லிம் காங்கிரஸின் சொந்தத் தேசியப் பட்டியல் அல்ல. ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல். எனவே, உரிய நேரத்தில் தேசியப் பட்டியலை தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பிப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸின் 02 பெயர்களைத் தருமாறு ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுக்கொண்டது. இந்தத் தேசியப் பட்டியல்கள் யாருக்கு வழங்கப்படுமோ என்று மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்க, எதிர்பாராத இருவரை தேசியப் பட்டியலுக்குப் பெயரிட்டு அனுப்பி வைத்தார் ஹக்கீம். தனது சகோதரரும் ஊடக செயலாளருமான வைத்தியர் ஹபீஸ், சட்டத்தரணி சல்மான் ஆகிய இருவரின் பெயர்களும் தேசியப் பட்டியலுக்காக பிரேரிக்கப்பட்டதைக் கேள்வியுற்ற போராளிகள், கட்சிக்காரர்கள் ஆடிப்போய் விட்டனர்.

முன்னதாக முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக தேசியப் பட்டியலுக்கு ஐந்து பேர் பெயரிடப்பட்டு இருந்தனர். கட்சியின் செயலாளர் நாயகம் ஹஸனலி, நிசாம் காரியப்பர், நஜா மொஹமட், டாக்டர் ஹபீஸ், சல்மான் ஆகியோரே அவர்களாவர். ஆனால், இதில் ஏனைய மூவரது பெயர்களையும் தேசியப் பட்டியலுக்கு முன்மொழியாமல் கிழக்கு மாகாணத்துக்கு வெளியில் வசிக்கும் இருவரது பெயரைப் பரிந்துரைத்தமை பல்வேறு கேள்விகளுக்கு இட்டுச் சென்றது. பலர் தேசியப் பட்டியலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் போது கட்சியின் நேரடி அரசியலுக்கு அப்பாற்பட்ட இருவரை எம்.பி.யாக்கியது உடனடியாக ஜீரணிக்கக் கூடியதாக இருக்கவில்லை. இருப்பினும், கட்சித் தலைவர் சொன்ன காரணத்தில் ஒரு நியாயம் இருந்தது. அதாவது, அவசரமாக இருவரது பெயரைக் கொடுக்க வேண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளது, எனவேதான் கொடுத்தோம் விரைவில் இவ்விருவரும் இராஜினாமாச் செய்வார்கள் என்று அவர்கள் கூறியதை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால், இங்கு பிரச்சினை இதுவல்ல. தலைவர் ஹக்கீம் தனக்கு நம்பிக்கையான இருவருக்கு தேசியப் பட்டியல் வழங்கியிருக்கின்றார் என்ற வசனம்தான் சர்ச்சைக்குரியது. அப்படியென்றால் பெயர் பிரேரிக்கப்பட்ட ஏனைய மூவரும் நம்பிக்கை அற்றவர்களா? அல்லது நம்பிக்கை குறைந்தவர்களா? என்ற கேள்வி இங்கு எழுகின்றது. தலைவர் அஷ்ரப்பின் காலத்தில் இருந்து, அதாவது ஹக்கீமுக்கு முன்பிருந்தே கட்சிக்காகப் பல தியாகங்களைச் செய்த ஹஸனலி, நிசாம் காரியப்பர் ஆகியோரைவிட மேற்குறிப்பிட்ட இருவரும் தலைவரின் நம்பிக்கைக்கு உரியவர்கள் என்று கூறுவதை என்னவென்று சொல்வது?

அப்படியென்றால் நம்பிக்கை இல்லாதவர்களை ஏன் தேசியப் பட்டியலில் தலைவர் போட்டார்? என்ற கேள்விக்கு விடையளிக்க வேண்டும். ஹஸனலியையும் நிசாம் காரியப்பரையும் விசுவாசமானவர்களாகக் கருதாமை உண்மையில் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பல்ல. மாறாக, ஒட்டுமொத்த மூத்த போராளிகளின் விசுவாசத்தை கேலிக்குள்ளாக்கிய செயலாகும். இந்த அறிவிப்பினால், உண்மையாகவே தலைவர் மீதான, கட்சிமீதான பலரது விசுவாசமும் நம்பிக்கையும் தற்போது குறைவடைந்திருக்கின்றது என்பது காலப்போக்கிலேயே வெளியில்வரும்.

இவ்வாறு ஓரிருவரின் தற்துணிவில வழங்கப்பட்ட தேசியப் பட்டியல்தான் இப்போது சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கின்றது. சரியான கூட்டு ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தால், இப்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கட்சியில் உள்ள எல்லோரும் முன்வந்திருப்பர். ஆயினும் தலைவரே தீர்மானமெடுக்கும் ஏக அதிகாரத்தைக் கொண்டிருப்பதால் அவரது தலையில் பாரத்தைப் போட்டுவிட்டு நடப்பது நடக்கட்டும் என்று இருக்கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள்.

தேசியப் பட்டியலுக்காகவோ எம்.பி.ப் பதவிகளுக்காகவோ இதற்கு முன்னர் ஒருக்காலும் முஸ்லிம் மக்கள், குறிப்பாக கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் இந்தளவுக்கு தமக்கிடையே கருத்து முரண்பட்டது கிடையாது. வேற்று மதத்தவரான (ஆனால் சுஹைறரை விட நம்பிக்கையுள்ளவரான) அசித்த பெரேராவுக்கு தேசியப் பட்டியல் வழங்கப்பட்ட போது முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் அஷ்ர புக்கு எதிராக போர்க் கொடி தூக்கியது கிடையாது. கண்டியைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் அம்பாறையில் வந்து போட்டியிட்டு வெற்றிபெற்று எம்.பி.யாவதை இப்பகுதி மக்கள் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் பார்க்கவில்லை.

அதேபோல், தேசியப் பட்டியல் வேட்பாளராக நிந்தவூரைச் சேர்ந்த ஒருவர் பெயரிடப்பட்டிருக்கும் நிலையில் இன்னுமொருவருக்கு அதிக விருப்பு வாக்குகளை வழங்கியிருக்கின்றார்கள் என்றால் அவர்கள் ஒரு ஊரில் இரண்டு எம்.பி.க்கள் உருவாவது பற்றிச் சிந்திக்கவில்லை என்றுதானே அர்த்தம். ஊருக்கொரு எம்.பி. வேண்டும் என்ற எண்ணமோ அதில் இந்த குறிப்பிட்ட நபர்தான் பதவி வகிக்க வேண்டும் என்ற தன்னலமோ மக்களுக்குக் கிடையாது என்றே கணிக்க வேண்டியிருக்கின்றது. ஆனால், இப்போது வேறு ஒரு ஊர்க்காரனுக்கு வாக்களிப்பதை, பக்கத்து ஊர்க்காரனுக்கு தேசியப் பட்டியல் கிடைப்பதை எதிர்க்கும் அளவுக்கு நிலைமைகள் மாறியிருக்கின்றன. முன்னொரு காலத்தில் சிங்களவர் ஒருவருக்கு தேசியப் பட்டியலைக் கொடுத்து அழகு பார்த்த இந்த சமூகம் இன்று பக்கத்து ஊர்க்காரனுக்கு, அடுத்த மாவட்டத்தில் உள்ள முஸ்லிமுக்கு தேசியப் பட்டியல் சென்றுவிடக் கூடாது என்பதற்காகக் கடுமையாகப் பாடுபடுகின்றது. பாராளுமன்றக் கதிரைக்கு ஆசைப்படுகின்ற சிலர் இதற்காக நிறைய செலவு செய்கின்றார்கள். அப்படியென்றால், இதற்குக் காரணம் யார் யார் என்பதை மக்கள் அறிவார்கள்.

எப்படி இனவாதம் பேசி தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தையும் பிளவுபடுத்தினார்களோ அதுபோல பிரதேசவாதம் பேசிப் பேசி மக்களை உசுப்பேற்றிவிட்ட மூன்றாந்தர அரசியல் வாதிகளே இந்த மாற்றத்திற்குக் காரணமாகின்றார்கள். தமக்கு எம்.பி. பதவி கிடைக்க வேண்டும் என்ற பேராசை முஸ்லிம் காங்கிரஸில் அங்கம் வகிக்கும் கிட்டத்தட்ட அனைத்து உறுப்பினர் களுக்கும் ஏற்பட்டுவிட்டது. அதனடிப்படையில் நமது ஊருக்கு ஒரு எம்.பி. வேண்டும் என்ற கோஷத்தை மக்களின் உணர்வுகளுடன் கலந்துவிட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு ஊருக்கும் வரும் தலைவர் அதற்கான வாக்குறுதியையும் அள்ளி வீசினார். போராளிகளின் மனதில் தேசியப் பட்டியல் வேள்வி எரியத் தொடங்கியது. இன்று அதுவே தலைவரின் கால்களைச் சுடத் தொடங்கியிருக்கின்றது.

தேசியப் பட்டியலைப் பகிர்ந்தளிப்பதில் தலைவர் மிகவும் சிரமப்படுகின்றார். இதில் ஒருவரைத் திருப்திப்படுத்தினால் மற்றையவரைக் கட்சி இழக்கவேண்டிய நிலையே இருக்கின்றது. ஆனால், சில பிரதேசங்களுக்கு தேசியப் பட்டியல் வழங்க வேண்டும் என்பதில் தலைவரும் உறுப்பினர்களும் உறுதியாக இருப்பதாகத் தெரிகின்றது. உதாரணத்திற்கு அட்டாளைச்சேனையை எடுத்துக் கொள்ளலாம்.

உண்மையாகவே அட்டளைச்சேனைக்கு தேசியப் பட்டியல் கொடுக்க வேண்டும் என்று தலைவர் கருதியிருந்தால், தேசியப் பட்டியலில் சல்மான் அல்லது ஹபீஸின் பெயருக்குப் பதிலாக அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஒருவரின் பெயரை கட்டாய மாகப் போட்டிருக்க வேண்டும். ஆயினும், இந்தத் தடைகளை யெல்லாம் தாண்டி அட்டாளைச்சேனைக்கு தேசியப் பட்டியல் தருவது என்று முடிவெடுத்தாலும் யாருக்குக் கொடுப்பது என்ற பிரச்சினை இருக்கின்றது. ஒவ்வொரு ஊரிலும் குறைந்தது இரண்டு முஸ்லிம் காங்கிரஸ் பிரிவுகளை ஹக்கீம் பிரித்தாளுகை செய்துவருவதால், ஒரு தரப்புக்குக் கொடுத்தால் மறுதரப்பானது கட்சி மாறிவிடக்கூடிய ஆபத்து இருக்கின்றது. இந்நிலைமை அட்டாளைச்சேனைக்கு மட்டுமே உரிய பண்பல்ல. தேசியப் பட்டியல் கேட்கும் பல பிரதேசங்களின் யதார்த்தம் இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இவற்றையெல்லாம் சமாளித்து தேசியப் பட்டியல்களைச் சரியாக பகிர்ந்தளிப்பதிலேயே தலைமைத்துவத்தின் முதிர்ச்சியும் பக்குவமும் சாணக்கியமும் தங்கியிருக்கின்றது. எல்லா ஊர்களிலும் ஏகப்பட்டோர் தேசியப் பட்டியல் கேட்டு அழுத்தம் கொடுக்கின் றார்கள். எனவே, இப்போது முடிவெடுக்க முடியாமல் இருக்கின்றது. யாருக்காவது இருவருக்குக் கொடுத்தால், இன்னும் இருபது பேர் முரண்படுவார்கள் என்று தலைவர் ஹக்கீம் இப்போது சொல்லிக்கொண்டிருக்கின்றார். அது உண்மையே. ஆனால், இரண்டு மாதங்கள் கடந்த பின்னும் தேசியப் பட்டியலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஊரையும், நபரையும் பேய்க்காட்டிக்கொண்டு இப்படியே காலத்தை இழுத்தடித்துச் சென்றுகொண்டிருக்க முடியாது.

உருப்படிகளைவிட உருப்படியானவர்களால் தேசியப் பட்டியல் நிரப்பப்பட வேண்டும். வேறெந்த பொல்லாப்புமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பட்டியல்

மர்சூக் அஹமட் லெப்பை

விடிவெள்ளி, 29.01.2016

*ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசியப்பட்டியலில் இரண்டில் ஒன்றுக்கு ஒருவாறு நீண்ட இழுபறியின் பின் ஒரு முடிவு கிடைக்கப்பெற்றிருக்கின்றது. அவ்வெற்றிடத்திற்கு முன்னாள் பிரதி அமைச்சர் சின்ன தௌபீக் நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இழந்த பிரதிநிதித்துவத்தை இந்த தேசிய பட்டியல் பிரதிநிதி மூலம் மீண்டும் பெற்றுக் கொண்டுள்ளது.*

*இதற்கு முன்பும் ஒருமுறை சின்ன தௌபீக்குக்கு தேசியப் பட்டியல் வழங்கப்பட்டிருந்தது. பலமுறை அவர் பாராளுமன்றத்திற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்டு செல்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் உதவியுள்ளது. நிச்சயமாக வென்று இருக்கவேண்டிய சின்ன தௌபீக் சிறிய தவறினால் தோல்வியடைந்ததால் கட்சியினுடைய தலைவர் அவருக்கு தேசியப் பட்டியலை வழங்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டிருக்கின்றார்.*

*ஏனெனில், திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரசுக்கு இவரது தோல்வியால் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் இல்லை. இந்தவொரு நியாயத்திற்காக றவூப் ஹக்கீமினால தேசியப் பட்டியல் வழங்கப்பட்டிருந்தாலும் சரியான தேர்தல் வியூகம் இல்லாமல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநியாயமாகத் தோற்றுவிட்டு வந்து சின்ன தௌபீக் தேசியப் பட்டியல் ஒன்றை அநியாயமாக்கக் கூடாது. அந்தத் தேசியப் பட்டியலானது காத்தான்குடி போன்ற முக்கியமான ஊரகளுக்குச் சொந்தமானது. அவர்களும் தேசியப் பட்டியலைப் பெற்று தங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

தேசியப் பட்டியலானது சின்ன தௌபீக்குக்கு மட்டும் உரித்துடையானது அல்ல. தற்போது தேசியப் பட்டியலைப் பெற்றிருக்கும் சின்ன தௌபீக் ஆனவர் எதிர்காலத்தில் தனது தவறுகளைத் திருத்தி தனது தோல்விக்கான காரணத்தை சரியாக அடையாளம் கண்டு அதனை சரிக்கட்டி மக்களால் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்றம் செல்வதற்காக இப்போதே முழு மூச்சுடன் இறங்க வேண்டும். அதனை விட்டு மீண்டும் தோல்வியைத் தழுவி மீண்டும் காத்தான்குடி போன்ற முக்கியமான ஊர்களுக்கு கிடைக்க வேண்டிய தேசியப் பட்டியலை சின்ன தௌபீக் மீண்டும் சாப்பிடக் கூடாது.

இன்று தலைவர் றவூப் ஹக்கீமின் திருகோணமலை மாவட்டத்திற்கு தேசியப் பட்டியலில் ஒன்றை வழங்கும் தீர்மானத்தை முஸ்லிம் காங்கிரஸ்காரர்களில் 60 வீதமானோர் ஆதரிக்கின்றனர். அதற்கு இதுவரை காலமும் திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரசுக்கு இருந்து வந்த பிரதிநிதித்துவத்தை இம்முறை இழந்ததுதான் காரணம்.

திருகோணமலைக்கு றவூப் ஹக்கீம் தேசியப் பட்டியலை வழங்கியது சரி. ஆனால், சின்ன தௌபீக்குக்கு வழங்கியது சரியா என்றொரு கேள்வியும் இங்கிருக்கின்றது. ஏனெனில், சின்ன தௌபீக் பலமுறை பாராளுமன்றத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதியாக இருந்தவர். முன்பு ஒருமுறை தேசியப் பட்டியல் பிரதிநிதியாகவும் இருந்தவர். பிரதி அமைச்சராகவும் இருந்தவர். இவ்வளவு அதிகாரத்தில் இருந்தும் இவரால் தேர்தலில் வெல்ல முடியவில்லை என்பதால் திருனோணமலை மாவட்டத்தில் மற்றுமொருவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தேசியப்பட்டியலை வழங்கியிருக்க வேண்டும் என்பது காங்கிரஸ்காரர்களின் கருத்தாகும். சின்ன தௌபீக் ஒரு பெரிய சதியால் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் பரவாயில்லை எளிதாக வெல்வதற்கு இவருக்கு சந்தர்ப்பம் இருந்தது.

எமது சமூகத்திலே முஸ்லிம் தலைவர்களுக்கு பெரும் பஞ்சம் இருக்கின்றது. றவூப் ஹக்கீம் ஒரு தேசிய தலைவராக மிளிர்வதற்கு சகல அமசங்களும் பொருந்தியவர். அவருக்கு அடுத்த நிலையிலுள்ள தலைவர்கள் யார்? என்ற கேள்வி எழுகின்றது. தமிழ் தலைவர்களில் சம்பந்தன் ஐயா இருக்கின்றார், சுமந்திரன் இருக்கின்றார், முதலமைச்சர் விக்னேஸ்வரன் இருக்கின்றார், சுரேஷ் பிரேமசந்திரன் இருக்கின்றார், மாவை சேனாதிராஜா இருக்கின்றார், சித்தார்த்தன் இருக்கின்றார், சிவாஜிலிங்கம் இருக்கின்றார். இவ்வாறு தமிழ் சமூகத்திற்கு ஒருவர் இல்லாவிடின் மற்றொருவர் குரல் கொடுக்க ஆயத்தமாக இருக்கின்றார். ஆனால், முஸ்லிம் காங்கிரஸில் ஒருவர் இல்லாவிட்டால் குரல் கொடுப்பதற்கு இன்னொருவர் இல்லை. ஓரளவு றவூப் ஹக்கீம் மாத்திரம்தான் இருக்கின்றார்.

முஸ்லிம் காங்கிரஸின் அடுத்த மட்ட தலைவர்களை வளர்த்தெடுக்க வேண்டிய தலையாய பொறுப்பு றவூப் ஹக்கீமிடமே இருக்கின்றது. ஏனெனில், றவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸில் இணையும் போது ஒரு தலைவராக இருக்கவில்லை. மறைந்த மாமனிதர் அஷ்ரப்பினால் தனக்குப் பின் ஒரு தலைவராவதற்கு றவூப் ஹக்கீம் திட்டமிடப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டார். அஷ்ரப், றஹூப் ஹக்கீமுக்கு செயலாளர் பொறுப்பை வழங்கினார். பின்னர் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கினார். பின்னர் குழுக்களின் பிரதித் தலைவராக்கினார். இவ்வாறுதான் றவூப் ஹக்கீம் மறைந்த மாமனிதர் அஷ்ரப்பினால் படம்போடப்பட்டார். இவ்வாறு அஷ்ரப்பினால் தனக்குப் பின் இந்த கட்சிக்கும் சமூகத்திற்கும் ஒரு தலைவர் வேண்டுமென தீர்க்க தரிசனத்தோடு றவூப் ஹக்கீம் வளர்க்கப்பட்டார்.

இதேபோல தனக்கு அடுத்ததாக இந்த கட்சிக்கும் சமூகத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய தலைவர்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு றவூப் ஹக்கீமிடமே இருக்கின்றது. முஸ்லிம் சமூகத்தின் சம்பந்தனாக றவூப் ஹக்கீமை நாங்கள் கொள்ளலாம். முஸ்லிம் சமூகத்தின் சுமந்திரன் யார்? முஸ்லிம் சமூகத்தின் விக்னேஸ்வரன் யார்? முஸ்லிம் சமூகத்தின் சுரேஷ் பிரேமச்சந்திரன் யார்?

தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் குரல்கொடுக்க பல தலைவர்கள் இருக்கின்றார்கள். அதுதவிர வெளிநாடுகளிலும் டயஸ்போறா போன்ற பல அமைப்புக்கள் தமிழர்களுக்காக பாடுபட இருக்கின்றார்கள். முஸ்லிம்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் உள்நாட்டிலே குரல்கொடுக்கக் கூடிய தலைவர்கள் யார்? வெளிநாட்டில் செயற்படக்கூடிய அமைப்புக்கள் எது? இந்த நாட்டிலே தமிழர்களுக்கு வந்த பிரச்சினை போல் முஸ்லிம்களுக்கும் வந்திருந்தால் இன்று இந்த நாட்டிலே முஸ்லிம்கள் என்று சொல்லிக்கொள்ள யாரும் இருந்திருக்கமாட்டார்கள்.

எனவே, தேசியப் பட்டியல் வழங்கும்போது றவூப் ஹக்கீம் இந்த விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். இது முக்கியமான காலகட்டம். புதிய அரசியல் யாப்பு ஒன்று இந்த நாட்டிலே முதன் முறையாக மக்களால் தயாரிக்கப்படப் போகின்றது. இந்த சூழலில் றவூப் ஹக்கீம் சுகவீனம் காரணமாகவோ அல்லது வெளிநாட்டில் இருப்பதன் காரணமாகவோ பாராளுமன்றத்திற்கு சமூகம் கொடுக்க முடியாவிட்டால் அன்று அந்த இடத்தை நிரப்பக்கூடிய முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற பிரதிநிதி ஒருவரும் இல்லை. இவ்வாறான தலைவர்களை றவூப் ஹக்கீம் தேசியப் பட்டியல் ஊடாக வளர்த்தெடுக்க வேண்டும்.

ஏனெனில், றவூப் ஹக்கீம் அவ்வாறு தேசியப் பட்டியல் ஊடாக வளர்க்கப்பட்டவர்தான். உதாரணமாக பொறியியலாளர் அப்துர் ரஹ்மான், சட்டத்தரணி நிசாம் காரியப்பர் போன்றவர்கள் முஸ்லிம் சமூகத்தின் சுமந்திரனாக, முஸ்லிம் சமூகத்தின் விக்னேஸ்வரன்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள். பொதுத் தேர்தலின்போது தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றம் செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதவர்களாக இருக்கலாம். ஆனால், இவர்களுடைய சேவை சமூகத்திற்குத் தேவை. தேசியப் பட்டியல் உருவாக்கப்பட்டதன் நோக்கமும் இவ்வாறானவர்களுடைய சேவையை நாட்டிற்குப் பெற்றுக்கொடுப்பதே. றவூப் ஹக்கீம் தேசியப் பட்டியல் வழங்கும்போது தனியே கட்சியின் நலன் மாத்திரம் பாராமல் சமூக நலனையும் கருத்திற்கொண்டு தேசியப் பட்டியலை வழங்க வேண்டும்.

எனவே, மறைந்த மாமனிதர் அஷ்ரப் எவ்வாறு றவூப் ஹக்கீமுக்கு தேசியப் பட்டியல் உட்பட பல்வேறு பதவிகளை வழங்கி தனக்கு அடுத்த தலைவராக வளர்த்தாரோ அதேபோல றவூப் ஹக்கீமும் தேசியப்பட்டியலை பொருத்தமானவர்களுக்கு வழங்கி அதன் மூலம் சமூகத்தையும் பாராளுமன்றத்தையும் அலங்கரிக்கின்ற அடுத்த தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைப்பட்டியல், கொலைப்பட்டியல், மு.கா.தேசியப்பட்டியல்

ஏ.எல்.எம். றிபாஸ்

விடிவெள்ளி, 26.08.2016

முஸ்லிம் காங்கிரஸின் முதலாவது தேசியப்பட்டியல் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் விலைப்பட்டியல் மூலம் பொருட்களுக்கு விலையிட்டு விற்கப்படுவது போல தகுந்த விலைக்கு விற்கப்பட்டது தான்.

1989ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தல் மூலம் முஸ்லிம் காங்கிரசுக்கு கிடைத்த ஒரே ஒரு தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவம் தொழில் அதிபரான Fair Line நிறுவனத்தலைவர் என்.எம். புஹாருத்தீன் ஹாஜியாருக்கு விற்கப்பட்டது. புஹாருத்தீன் ஹாஜியார் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபிதத்தில் பங்களிப்புச் செய்தவராகவோ, கட்சியின் அரசியல் பணிகளை முன்னெடுத்தவராகவோ அறியப்படவில்லை.

முஸ்லிம் காங்கிரஸின் அப்போதையதலைவர் மர்ஹூம் எம். எச்.எம். அஷ்ரப் அவர்களின் ஹெலிகொப்டர் பயணம், கட்சியின் தேர்தல் செலவுகள் போன்றவற்றுக்கு பணத்தை வாரி வழங்கினார் அதற்கானவிலையாகதேசியப் பட்டியல் நியமனம் அவருக்குவழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**1994**ம் ஆண்டுபாராளுமன்ற பொதுத்தேர்தலில் இரண்டாவது தடவையாகக் கிடைத்த தேசியப்பட்டியல் நியமனங்களில் எம். எம்.சுஹைர், ஏ.ஆர். றவூப் ஹக்கீம் இருவருக்கும் வழங்கியது போக மற்றைய நியமனத்தை லிபரல் கட்சியைச் சேர்ந்த சாணக்க அமரதுங்க அவர்களுக்கு விலை பேசி விற்க ஒப்பந்தம் செய்யப்பட்டு அதேகட்சியைச் சேர்ந்த அசித்த பெரேராவுக்கு வழங்கப்பட்டது, முஸ்லிம் விரோதபோக்கினையும், சியோனிச ஆதரவுத்தளத்தினையும் கொண்டிருந்த லிபரல் கட்சிக்கு தேசியப் பட்டியல் நியமனத்தை வழங்கயது தொடர்பில் கட்சிக்கு உள்ளும் புறமும் ஏற்பட்ட அதிருப்தி அலைகளை சமாளிக்க அன்றைய தலைவர் அஸ்ரப் அவர்கள் அசித்த பெரேரா முஸ்லிமாக மாறி தனது பெயரை அஸீஸ் பெரேராஎனமாற்றிக் கொண்டதாக முஸ்லிம் மக்களிடம் சொன்னார்.

இவ்விலைப் பட்டியலின் தொடர்ச்சியானதேசியப்பட்டியல் நியமனம் கட்சிமட்டத்தில் நடந்தேறிய சில திரை மறைவு வேலைகளுக்கு பகரமாக கட்சியின் தவிசாளரான பஸீர் சேகுதாவூக்கு மூன்று முறையும் கட்சியின் செயலாளரான எம்.ரி. ஹஸன் அலிக்கு இரண்டுமுறையும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டது.

இவ்வாறு தனிநபர்களுக்கு விலைபேசி விற்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட தேசியப் பட்டியல் நியமனமானது சில பிரதேசமக்களின் வாக்குகளை சூறையாடிக் கொள்வதற்கான தேர்தல் வாக்குறுதியாக காலத்திற்கு காலம் விலையிடப்பட்டது. அட்டாளைச்சேனை, கல்குடா, மூதூர், பொத்துவில் போன்ற பிரதேசங்களுக்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்குவதாக பல மானவாக்குறுதிகள் வழங்கப்பட்டு மீறப்பட்டது.

**2000**ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிப்பதற்கு மூன்று தேசியப்பட்டியல் நியமனங்கள் விலைபேசப்பட்டு பொதுஜன ஐக்கிய முன்னணயிடமிருந்து மருதூர்கனி, நிஸ்விசின்னலெப்பை, பஷீர் சேகுதாவூத் ஆகியவர்களுக்கு தேசியப்பட்டியல் நியமனங்கள் பெறப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளிப்பதற்கு மூன்று தேசியப்பட்டியல் நியமனங்கள் விலை பேசப்பட்டு ஐக்கிய தேசியக்கட்சியிடமிருந்து எம்.பி.ஏ. அஸீஸ், எம்.எஸ். தௌபீக், ஏ.எல்.எம். ஹப்றத் ஆகியோருக்கு தேசியப் பட்டியல் நியமனம் பெறப்பட்டன.

2004ம் ஆண்டுபொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளிப்பதற்கு உச்சபட்சமாக நான்கு தேசியப் பட்டியல் நியமனங்கள் விலைபேசப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து எஸ். நிஜாமுத்தீன், கே.ஏ. பாயிஸ், ஹூஸைன் அஹமட் பைலா, பஸீர் சேகுதாவூத் ஆகியோருக்கு தேசியப்பட்டியல் நியமனங்கள் பெறப்பட்டன.

2010ம் ஆண்டு பொதுத் தேர்தலில் மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளிப்பதற்கு இரண்டு தேசியப்பட்டியல் நியமனங்கள் விலை பேசப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து எம்.ரி. ஹஸன் அலி, எம். அஸ்லம் ஹாஜியார் ஆகியோருக்கு தேசியப்பட்டியல் நியமனம் பெறப்பட்டன.

தனிநபர்களுக்கும் இரு தேசியக் கட்சிகளுக்கும் விலை பேசி விற்கப்பட்டும், வாங்கப்பட்டும் வந்த தேசியப்பட்டியல் நியமனமானது 2015ம் ஆண்டு பொதுத் தேர்தலில் புதிய பரிமாணமாக, புதிய யுக்தியாகசக அரசியல் கட்சியாகிய நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (NFGG) யுடன் தேர்தல் ஒப்பந்தம் என்ற போர்வையில் தேசிப்பட்டியல் விலை வைக்கப் பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதித்துவத்தை (அலிஸாஹிர் மௌலானா) உறுதிப்படுத்திக் கொள்வற்காக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் சுமார் 12,000 வாக்குகள் முஸ்லிம் காங்கிரஸினால் திட்டமிட்டு காவு கொள்ளப்பட்டது.

விலைப்பட்டியல் போல விலைபேசி பல காலமாக விற்கப்பட்டு வந்த முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் நியமனமானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று நெடுகிலும் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர் பலர் அரசியல் தற்கொலை செய்து கொள்வதற்கும் தனித்துவ அரசியல் கொள்கைகளை கொன்று குவிப்பதற்குமான கொலைப்பட்டியல் போலாகியும் விட்டதென்பதற்கு தேசியபட்டியலை மையமாக வைத்து கட்சிக்குள் நிகழ்ந்து வரும் அரசியல் குத்து வெட்டுக்கள், கழுத்தறுப்புக்கள், காய்நகர்த்தல்கள் போன்றன தக்க சான்றுகள்.

முஸ்லிம் காங்கிரஸ் 1994ம் ஆண்டுபொதுஜன ஐக்கிய முன்னணியுடனும், லிபரல் கட்சியுடனும் தேசியப்பட்டியல் நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் உடன்பாட்டைச் செய்து தான் பேசி வந்த தனித்துவ அரசியல் கொள்கையினை கொலை செய்தது. அதனைத் தொடர்ந்து வந்த அனைத்து பொதுத் தேர்தல்களிலும் தேசியப்பட்டியல் நியமனத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் பேரம் பேசல்களில் முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டு வருகின்றது. இந்த அரசியல் பயணத்தில் சாதித்தவைகளை விட சாகடிக்கப்பட்ட கொள்கைகளே அதிகம். முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் இன்று வரைக்கும் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் உட்கட்சிக் கலவரங்களுக்கும் கையிறுமுப்புகளுக்கும் காரணம் தேசியப்பட்டியல் நியமனங்களே.

2000ம் ஆண்டு தலைவர் அஷ்ரப்பின் மரணத்தைத் தொடர்ந்து கட்சி இரண்டு படுவதற்கும் இணைத்தலைமைப் போட்டிக்கும் தேசியப்பட்டியல் மூலம் நியமனம் பெற்ற எம்பிக்களின் இழுபறி ஒரு முக்கிய காரணம். அப்போது பேரியல் அஷ்ரப்புடன் தேசியப் பட்டியல் பாராளுமன்றப் பிரதிநிதிகளான மருதூர்க்கனி, றிஸ்வி சின்ன லெப்பை இருவரும் கைகோர்த்து செயற்பட்டதால் கட்சிக்கும் மட்டுமல்ல கலவரம் அன்றைய பொஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கவிழ்க்கப்பட காரணம் கொள்கைகளை கொலை செய்து விட்டு அதிகாரத்திற்கும் அமைச்சுப் பதவிகளுக்கும் இப்பிரதிநிதிகள் அங்கும் இங்கும் அலைந்துதிரிந்தமையே.

2001ம் ஆண்டு தேசியப்பட்டியல் நியமனம் பெற்ற எம்பிக்களான எம்.பி.ஏ. அஸீஸ், ஏ.எல்.எம். ஹப்றத் இருவரும் அதாஉல்லாவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிசேர்ந்து கொண்டு றஊப் ஹக்கீமுக்கு எதிரான 37 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கட்சியின் தலைமையினை கைப்பற்றிக் கொள்ளும் முயற்சியில் தேசியப்பட்டியல் நியமனம் பெற்றுகட்சியின் செயலாளராக பொறுப்பு வாய்ந்த பதவி வகித்து கையெழுத்திட்ட ஏ.எல்.எம். ஹப்றத்தின் செயற்பாடும் ஒரு முக்கிய காரணமாகும்.

2004ம் ஆண்டு தேசியப்பட்டியல் எம் பி பதவியினை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் விலைபேசிவிட்டுத்தான் அன்வர் இஸ்மாயில், எச்.எம்.எம். ஹரீஸ், எம்.பி.ஏ. அஸீஸ் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸை விட்டுவெளியேறினர்.

2004ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து போட்டியிட்டமைக்காக முஸ்லிம் காங்கிரஸுக்கு ரணில் விக்ரமசிங்க தனது கட்சிக்குள் நிலவிய எதிர்ப்பலைகளையும் பொருட்படுத்தாது நான்கு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமைகளை வழங்கினார். இச்செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்தடி ரோன் பெர்னாண்டோ உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறினர்.

2004ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து பெற்றுக் கொண்ட தேசியப்பட்டியல் நியமனங்களை றஊப் ஹக்கீம் தனது நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் பாத்திரமானதனது கார் சாரதி பி.எஸ். புஸ்பகுமார, தனது மாமனார் ஐ. குத்தூஸ், கட்சியின் உயர்பீட உறுப்பினரான ஹுஸைன் அஹமட் பைலா மூவருக்கும் தற்காலிக நியமனங்களை வழங்கினார்.

ஐ.குத்தூஸ் இராஜினாமாச் செய்து எஸ்.நிஜாமுத்தீனுக்கும், பி.எஸ். புஸ்பகுமார இராஜினாமாச் செய்து பஷீர்சேகுதாவூத் அவர்களுக் கும் வழங்கினர். ஹுஸைன் அஹமட் பைலா தற்காலிகமாக வழங்கிய நியமனத்திலிருந்து இராஜினாமாச் செய்யாமல் நயவஞ்சகமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிக்கொண்டு வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் பதவி யினை பெற்றுக் கொண்டார். பின்னர் தேசியப்பட்டியல் மூலம் பிரதிநிதிகளாகவும், பிரதி அமைச்சர்களாகவும் பதவிகளை அடைந்து கொண்ட எஸ்.நிஜாமுத்தீன், கே.ஏ. பாயிஸ் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கியமக்கள் கூட்டமைப்பிலிருந்து 2007ம் ஆண்டிலில் பட்ஜட் மீதான இரண்டாவது வாக்கெடுப்பின் போது அரசாங்கத்திற்கெதிராக வாக்களித்து விலகியபோதும் பிரதி அமைச்சர்களான இவர்கள் அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டு விலகாது கட்சிக்கு துரோகம் இழைத்தனர்.

தேசியப்பட்டியல் நியமனம் வழங்குவதாக வாக்களிக்கப்பட்ட அட்டாளைச் சேனையைச் சேர்ந்த மசூர் சின்ன லெப்பையும், மருத முனையைச் சேர்ந்த மசூர்மௌலானாவும் முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை சுழற்ச்சி முறையிலாவது சொற்பகால மேனும் அனுபவிக்காமல் மனமுடைந்து மண் மறைந்து போனவர்கள்.

தொடர்ச்சியாக தேசியப்பட்டியல் நியமனத்தைப் பெற்ற பஷீர் சேகுதாவூதும், ஹஸன் அலியும் தமது பதவிக்காலத்தின் இறுதி இரு வருடங்களாவது மறைந்த இவர்களுக்கு வழங்கி சுழற்சிமுறைக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தியிருக்கலாம். தேசியப்பட்டியல் நியமனம்கிடைக்காததால்இன்று படமெடுத்தாடும்இவ்விருவருமே தேசியப்பட்டியல் கோட்பாட்டை கொலை செய்த முஸ்லிம் காங்கிரஸின் பெரும முன்னோடிகள்.

2015ம் ஆண்டு பொதுத் தேர்தில் முஸ்லிம் காங்கிரஸூக்குக் கிடைத்த இரண்டு தேசியப்பட்டியல் நியமனங்களுக்கு றஊப் ஹக்கீம் யினால் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட தனது சகோதரனாகிய ஏ.ஆர்.ஏ. ஹபீஸ், சுமார் அரையாண்டு காலம் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையொன்றை முன்வைத்து பாராளுமன்ற ஹன் ஈட்டில் தனது பெயரினையும் பதித்துவிட்டு இராஜினாமாச் செய்து அவ்விடத்திற்கு திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த எம்.எஸ் தௌபீக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

மற்றொரு தற்காலிக தேசியப்பட்டியல் நியமனமான எம்.எச். எம். ஸல்மான் ஏலவே மருதூர்கனி, எம்.பி.ஏ. அஸீஸ், ஏ.எல்.எம். ஹப்றத் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஒரு வருடம் பதவி வகித்தது போல முழுமையாக ஒரு வருடத்தினை பூர்த்தி செய்திருக்கின்றார்.

தற்காலிக எம்பியாக நியமிக்கப்பட்டிருப்பதாக கூறப்படும் இவரின் பாராளுமன்ற உறுப்புரிமை உண்மையில் தற்காலிகமானதா? அல்லது சுழற்ச்சி முறையின் அடிப்படையில் அமைந்ததா? அல்லது வடகிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம்களுக்கென முஸ்லிம் காங்கிரஸினால் வழங்கப்பட்டு வரும் வகையினைச் சார்ந்ததா? தாருஸ்ஸலாம் கட்டிடத்தின் கைமாற்றம் தொடர்பான சட்டக் கையாளுகைக்கு செய்யப்பட்ட கைமாறா?

அல்லது செயலாளர் நாயகம் ஹஸன் அலியின் பதவியினை சுற்றிவரும் செக்கு மாட்டுத்தனத்தை செரிமானம் செய்யும் வரைக்குமான இழுத்தடிப்பா? அல்லது ஹஸன் அலியுடனான சமசரத்திற்கான சாளரங்களை திறந்து வைத்து காத்திருக்கும் தந்திரோபாயமா அல்லது அட்டாளைச்சேனைக்கும், வன்னிக்கும், கல்குடாவிற்கும், நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கும் ஆப்புவைக்கும் அரசியல் காய் நகர்த்தலா?

எது எவ்வாறிருப்பினும் முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் நியமனம் என்பது தனிநபர்களுக்கு விலைபேசி விற்கப்படுவதற்கும் தேசியகட்சிகளிடமிருந்து அரசியல் அதிகாரங்களை அடைந்து கொள்வதற்குமான விலைப்பட்டியல் போலவும் தனித்துவ அரசியல் கொள்கை, கோட்பாடுகளை கொன்றொழிக்கும் கொலைப் பட்டியலாகவும் மாறிவிட்டதென்பது மட்டும் திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹஸனலியின் வெளியேற்றம் உணர்த்தும் உண்மைகள்

ஏ. பீர் முகம்மது

விடிவெள்ளி, 17.02.2017

கடந்த ஞாயிற்றுக்கிழமைசிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடுகொழும்பில் நடைபெற்றது. இம்மாநாட்டின் போது கட்சியின் உயர் பதவிகளுக்கான ஆட்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். இதன்போது செயலாளர் நாயகமான ஹஸனலிக்கு ஏற்கனவே வாக்குறுதியளிக்கப்பட்படி அதிகாரம் பொருந்தியசெயலாளர் பதவிவழங்கப்படாமல் மாநாடு நடந்து முடிந்திருக்கிறது.

கட்சியின் செயலாளர் நாயகமாக ஹஸனலி நீண்ட காலம் பதவி வகித்தவர். தலைவர் அஷ்ரப் காலத்திலும் ஹக்கீம் காலத்திலும் தமது தேவை கருதி கட்சியை நாடி வந்த மக்களுக்குப் பல்வேறு கடிதங்களையும் ஆவணங்களையும் இலட்சக்கணக்கில் தயாரித்து வழங்கி உதவியவர்.

இனப்பிரச்சினை தீர்வு நடவடிக்கைகளின் போதும் வெளிநாட்டி லிருந்து வருகை தரும் ஐ.நா. சபை போன்ற உயர் நிறுவன பிரதிநிதிகளைச் சந்திப்பதிலும் அரசாங்கத்துடனான பல்வேறு பேச்சுவார்த்தைகளில் கட்சிசார்பாகவும் கலந்து கொண்டவர். கட்சியின் ஆவணக் களஞ்சியமாக வர்ணிக்கப்பட்டவர். அஷ்ரப் இல்லாதநிலையில் கட்சியின் போராளிகள் இவரைக் கண்டதும் அன்பாகப் பார்ப்பதுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட முக்கியமான ஒருவர் தேசியப் பட்டியல் நியமனம் கேட்டார் என்ற காரணத்திற்காக பொருத்தமான பதவி வழங்கப் படாமல் கட்சியின் சாதாரண அங்கத்தவராக மாற்றப்பட்டுள்ளார்.

மறைந்ததலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் 1981 ஆம் ஆண்டு காத்தான் குடியில் மு.கா.வை ஆரம்பித்தார். எனினும் அக்காலகட்டத்தில் கட்சி போதிய வளர்ச்சி பெற முடியாமல் கிடப்பில் போடப் பட்டிருந்தது.

இந்நிலையில் வெளிநாட்டிலிருந்து தனது தொழிலை முடித்து நாட்டுக்கு வந்த ஹஸனலியும் அவரது நண்பரான கட்டடக் கலைஞர் எம்.ஐ.எம். இஸ்மாயில் என்பவரும் அஷ்ரபைச் சந்தித்து முஸ்லிம் கட்சியொன்றின் தேவை பற்றிக் கலந்துரையாடினார்கள். இதன் தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அன்றிலிருந்து இன்று வரை பல்வேறு நியமனங்களுக்கு மத்தியில் ஹஸனலி போராளி களின் உதவியோடு இக்கட்சியைவளர்த்தெடுத்தார்.

இப்படிப்பட்ட ஒருவரையே அளிக்கப்பட்ட வாக்குறுதியை மீறி தேசியப்பட்டியலும் செயலாளர் பதவியும் வழங்காமல் கட்சி ஒதுக்கிவைத்துள்ளது.

குர்ஆனையும் ஹதீஸையும் அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஒருகட்சி இப்படி நடந்து கொள்வது பற்றி முஸ்லிம்களுக்கு மத்தியிலும் ஏனையோருக்கிடையிலும் ஏமாற்றங்கள் வெளிப்படுத் தப்பட்டு வருகின்றன.

தேசியப்பட்டியல் விடயத்தில் தனிநபர்கள் மட்டுமல்ல, பல இயக்கங்களும் கட்சிகளும் கூட முஸ்லிம் காங்கிரஸினால் ஏமாற்றங்களைச் சந்தித்துள்ளன.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி என்பது 2013 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதும், கிழக்குமாகாணஅரசியலில் நல்லாட்சி என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியதுமான ஒரு அரசியல் கட்சியாகும். வடமாகாணசபையில் ஒரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் தலைமையிலான இம் முன்னணியுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் மு.கா. தேர்தல் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டு ஒரு ஆசனத்தைப் பெற்றுக் கொண்டது. மு.கா.வின் அலிசாகிர் மௌலானா உறுப்பினரானார். இந்த வெற்றியை மட்டக்களப்பில் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிருந்தால் மு.கா.வின் இன்றைய நிலை தலைகீழாக மாறியிருக்கும். தேசியப்பட்டியல் எண்ணிக்கை கூட ஒன்றாகக் குறைந்திருக்கும்.

இப்படிப்பட்ட முக்கியமான வெற்றியைப் பெற்றுக் கொடுத்த நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கு ஒப்பந்தப்படி தேசியப் பட்டியல் வழங்காமல் மு.கா. ஏமாற்றியது. எனவே கட்சியின் செயலாளர் நாயகம் ஏமாற்றப்படுவது ஒன்றும் பெரியவிடயமல்ல.

ஹஸனலி தன்னிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் தனக்கு வழங்கும்படி கேட்டார் என்பது அவருக்கெதிரான மற்றுமொரு குற்றச்சாட்டாகும்.

தலைவர் அஷ்ரபுக்குத் தேவைப்படாத அதிகாரம் ஹக்கீமுக்கு ஏன் இப்போது தேவைப்படுகிறது என்பது தான் எல்லோருடையதும் கேள்வியாகும்.

தலைவர் அஷ்ரபுடைய காலத்தில் 23 உயர்பீட உறுப்பினர்களே இருந்தனர். தற்போது 90 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ள நிலையிலும் தான் விரும்பும் விடயத்தை நிறை வேற்றிக்கொள்ள கட்சியிலும் உச்ச பீடத்திலும் போதிய வசதிகள் இருக்கும் நிலையிலும் ஏன் ஹஸனலியின் அதிகாரம் பறிக்கப்பட்டது என்பது பற்றி இப்போது மக்கள் யோசிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியின் மூத்த உறுப்பினர்களை ஒவ்வொருவராக வெளியேற்றும் முயற்சி படிப்படியாக நிறைவேறி வருகிறதென்று உயர்பீட உறுப்பினர்களும் இப்போது உணரத் தொடங்கியுள்ளார்கள்.

அதிகாரத்தைச் சுவைத்துப் பழகியவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தை இழக்க விரும்பமாட்டார்கள் என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

எப்படியும் ஜனாதிபதித் தேர்தலைவென்றுவிடுவார் என்று நம்பப்பட்ட மஹிந்த தோற்கடிக்கப்பட்டதும், பிரபாகரனின் கதை முடிவுக்கு வந்ததும் எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விலைப்பட்டியல், கொலைப்பட்டியல், மு.கா. தேசியப்பட்டியல்

## நன்றிகள்

- எம்.எம்.எம். நூறுல்ஹக்
- ஏ.எல். நிப்ராஸ்
- மர்சூக் அஹமட் லெப்பை
- ஏ. பீர் முகம்மது
- பீ.எம்.எம்.ஏ. காதர்
- எம்.பீ.எம். பைரூஸ்
- ஜே. பிரோஸ்கான்
- எம்.ஏ.எம். அஸ்மி

**விடிவெள்ளி, வீரகேசரி, ஸ்ரீலங்கா முஸ்லீம் இணையத்தளம், பேனா பப்ளிகேஷன் என்பவற்றுக்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உனது துயரங்களால் புதைக்கப்பட்ட ஆழத்திலிருந்து
உனது கைகளை நீட்டு
இறுகிய கல்லறைகளிலிருந்து நீ திரும்பப் போவதில்லை
புதையுண்ட காலத்திலிருந்து நீ எழப்போவதில்லை
உனது கனத்த குரலோ
கண்குழியிலிருந்து தோண்டப்பட்ட உனது விழிகளோ
மீண்டும் வரப்போவதில்லை.
பூமியின் அடியாழத்திலிருந்து என்னைப் பார்
நிலங்களை உழுபவனே,
நெசவாளியே,
வாய் திறவாத மெய்ப்பனே,
குலச்சின்னத்தின் சந்ததியே,
வஞ்சிக்கும் சாரத்தின்மேல் நிற்கும் கொத்தனே,
நசுங்கிய விரல்களுள்ள பொற்கொல்லனே,
நாற்றுகளை நினைத்துப் பதறும் உழவனே,
களிமண்ணுக்கிடையே விரயமாகும் குயவனே,
உனது
புதையுண்ட புராதன துக்கங்களை
புதுவாழ்வின் குவளைக்குள் கொண்டு வா.

**பப்லோ நெரூடா**

Cover Desi: M.A.M. Asmy

Pena Publication

ISBN 978-955-99400-3-6

9 789559 940036

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org